செய்தி வெளியீடு எண்: 39 நாள்: 25.11.2019

**தேனி மாவட்டம்,**
**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில்**
**114 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாவினை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.11.2019) நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகத்தில், திங்கள் கிழமைதோறும் அனைத்துத்துறை அரசு அலுவலர்களை கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. இன்றையதினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்களை பெற்றுக்கொண்டும், இதற்குமுன் பெறப்பட்ட மனுக்களின் மீதும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், அந்தந்த வட்டார அளவில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களை, எந்தவித காலதாமதமுமின்றி, உடனுக்குடன் மனுக்களை பரிசீலனை செய்து, தகுதியுடைய மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள, சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், ஆண்டிபட்டி வட்டம், மேக்கிழதார்பட்டி கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர் இன சமூகத்தைச் சார்ந்த 114 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆப., அவர்கள் வழங்கினார்.

மேலும்,பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெறப்பட்ட 464 மனுக்களை தொடர்புடைய அலுவலர்களிடம் வழங்கி, தகுதியுடைய மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) (பொ) எம்.முருகசெல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் எம்.சாந்தி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் க.சகுந்தலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**